Registered No. M. 878.

131

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிராஹ்மணாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 2. } 1911ஞு ஆகஸ்டுமீ 15உ
விரோதகிருதுஞு ஆடிமீ 31உ { பகுதி 4.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| காயத்திரீ—ப. நா. | க௨௩ |
| கர்மம்—ஒரு நண்பர் | க௩௦ |
| பாலஸு என்பாரின் விவாக விஷயமான மசோதாச் சட்டம் } ஆத்மநாதன் | க௩௫ |
| இரதோத்ஸவம்—வி. இராமச்சந்திர நாயக்கர் | க௪௦ |
| வண்டுமாங்கனி—ப. நா. | க௪௪ |
| புத்தகவரவு—பத்திராதிபர் | க௪௫ |
| சமாசாரம்—பத்திராதிபர் | க௪௬ |
| சங்கீதம்—பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் | க௪௭ |
| தென்னை, பனை மரத்து வண்டுகள்—ஸி. ஏ. பார்பர் | க௫௧ |
| பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம். | |



# The

# Oriental Prognostic Observatory.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (LOND.) O.M.D.S.F.V. (BERLIN).

M.O.S.M F. (PARIS): ETC.

Charges very moderate for the work turned out !

We do not for a moment deny that there are plenty of impostors who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN-LEO writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, SAMI PILLAI ST., Chulai, Madras, N.C. } **V. V. Ramanan,** Corresponding Director.

னே, அவ்வாறு நற்குணங்களை அடைய விரும்புகிறவன் உறுதியும், பரிசுத்தமுமான எண்ணங்களை மனமுவந்து வெளியிடுவான். அவைகள் ஜன்மாந்தரத்தில் நற்குணமாகவே அமையும். "மனிதன், தான் எண்ணுகிறபடி ஆகிறான்" என்பது சாந்தோக்கிய உபநிஷத்தின் உபதேசம். பிறர் விஷயமாக நாம் வெளியிடும் எண்ணங்களை அனுசரித்தே ஜன்மாந்தரத்தில் நமக்கு ஸகவாஸங்களும் சமயங்களும், சந்தர்ப்பங்களும் (Opportunities and environments) உண்டாகின்றன.

3. இச்சைகளால் கர்மாவை விளைவித்தல்:— இப்பொழுது நாம் இடங்கொடுத்து, அனுபவித்துவரும் இச்சைகள்தான் ஜன்மாந்தரத்தில் சூக்ஷ்மதேஹத்தில் இன்னும் தீவ்ரமான இச்சைகளாக ஏற்பட்டு இனிவரும் ஜந்மத்தின் காரியங்களுக்கு ஆதாரமாக ஏற்படுகின்றன. நாம் அபேக்ஷிக்கிற கர்மங்கள் எவ்விடத்தில் திருப்தியாகுமோ அந்தவிடத்தில் நமக்குப் பின் ஜன்மமுண்டாகும். தன்னுடைய கர்மங்களை அநுசரித்து மனிதன் பிறக்கிறானென்று பிருஹதாரண்யக உபநிஷத்தின் உபதேசம். இதரர்களைப் பற்றிய நம்முடைய இச்சைகள் நமக்கும் அவர்களுக்கும் ஓர் வித சம்பந்தத்தையுண்டாக்குகின்றன. இது விஷயமான பலன்களையும் ஜன்மாந்தரத்தில் அனுபவிக்கும்படி ஏற்படுகிறது.

4. செய்கைகள் கர்மாவை விளைவித்தல்:—இந்தஜன்மத்தில் நடக்கும் செய்கைகளெல்லாம் ஸாதாரணமாக முன் ஜன்மங்களில் நினைத்த எண்ணங்களுக்குப் பலன்களாகவே ஏற்படுவதால், செய்கைகள் முடிந்தவுடன் அழிந்துபோகின்றன. ஆனால் இப்பொழுது நடத்தப்படும் காலத்திலும் புதிய இச்சைகளாலும் எண்ணங்களாலும் பிரேரேபிக்கப்பட்டிருந்தால் அந்தச் செய்கைகள் ஜன்மாந்தரத்தில் அவைகளுக்குரிய பயன்களைக் கொடுப்பதற்கான சம்பந்தங்களை உண்டாக்கும். அதாவது, ஸகவாஸங்கள், முக்கியமாய் மனிதனில்லாத வீடு, நிலம் முதலான அமைப்புகள் ஸாதாரணமாக நாம் முன் ஜன்மத்தில் பிறருக்கேற்படுத்திய ஸாதகமான சவுகரியங்களுக்கேற்றபடி தான் நமக்கு இப்பொழுது சௌகரியங்களேற்படும். இனி வாக்கூடியதற்கும் இதுவே விதி.

5. மேற்கண்டபடி முப்பான்மையாய்ச் செய்யப்படும் கர்மம் மூவகைப்படும்: (1) பிராரப்தம் (2) ஸஞ்சிதம் (3) கிரியமாணம் அல்லது ஆகாமி.

பிராரப்த கர்மாவாவது:—இப்போது நிகழ்கின்ற ஜன்மத்தில் தடுக்கக்கூடாத விஷயங்களாக ஏற்படத் தயாராக விருக்கும் முதிர்ந்த கர்மமாம். மனிதன் பாத்தியப்பட்டிருக்கும் கர்மமொத்தத்தில் ஒரு ஜன்மத்தில் முடிவு பெறக்கூடியதாக இசைந்த ஒரு பாகத்தை மட்டும் கரும தேவதைகள் பிரித்து அதற்கு ஏற்ற தேசத்திற்கும், குடும்பத்திற்கும், தேகத்திற்கும் அந்த ஜீவனைச் சேர்ப்பிப்பார்கள். சுற்றமும், ஸகவாஸங்களும், உறவினர்களும், சிநேகிதர்களும், விரோதிகளும் இதர விஷயங்களும் அப்படியே ஏற்படும். இவைகள் ஒன்றையும் மனிதன் தவிர்க்கக்கூடியதல்ல. தான் முன் ஜன்மத்தில் செய்த ஸங்கற்பங்களை யனுசரித்தே எல்லாம் அமைகின்றன. அவைகள் சம்பந்தப்பட்டவரையில் தான் ஈடுபட்ட கடன்களை முற்றிலும் தீர்த்துவிடவேண்டும். இந்த ஜன்மத்தில் ஏற்படும் சூக்ஷ்ம மானஸிக தேகங்கள் முன் கர்மாவை யனுசரித்தே அமைந்திருப்பினும் புத்திசாலியானவன் அவைகளுக்குட்பட்டே நடந்து ஸத்கர்மங்களைச் செய்ய முயன்று முடிவும் பெறுவான். நமது ஸ்தூல மூளையும் நரம்புகளும் ஜந்மாந்தரத்தில் ஏற்பட்ட கர்மங்களை யநுசரித்து அமைக்கப்பட்டிருந்தாலும், அவைகளையும் அறிவால் கொஞ்சம் கொஞ்சமாக விருத்தி செய்து ஸ்வாதீனப் படுத்திக்கொள்வான். எவ்விதம் முட்டைக்குள்ளிருக்கும் கோழிக் குஞ்சானது அடைகாக்கப்பட்டுவந்து காலக்கிரமத்தில் முட்டையை உடைத்துக்கொண்டு வெளிக்கிளம்புமோ, அவ்விதம் தனது கர்மங்களையும், இச்சைகளையும் எண்ணங்களையும் திருத்திக்கொண்டேவருபவன் காலம் லபித்தவுடன் குருவின் வார்த்தையினாலோ, ஒரு கிரந்தம் படிப்பதினாலோ, அல்லது ஒருவருடைய பிரஸங்கத்தைக் கேட்பதினாலோ ஞானத்தைப் பெற்றுக் கடைத்தேறுவான்.

6. ஸஞ்சித கர்மமாவது:—நாம் அநேக ஜன்மங்களில் செய்து சேர்த்துவைத்துச் செலவிடப்படாதது. இவைகள் அநேக நாளாகச் சேர்ந்த அனுபவத்தால் மனிதனிடத்தில் ஸ்வபாவங்களாகவும் குண

ங்களாகவும் காணப்படும். இவைகளை அறிவினால் நல்ல ஸ்வபாவங்களையும் குணங்களையும் விருத்தி செய்துகொள்ளவும் தீயவற்றை நிவிர்த்திக்கவும் கூடும்.

7. கிரியமாணம் அல்லது ஆகாமி கர்மமாவது:—இந்த ஜன்மத்தில் நம்முடைய செய்கைகளால் ஏற்பட்டுவருவது. இவைகள் இனி வரும் ஜன்மங்களில் அவைகளுக்குரிய பலன்களையும் குணங்களையும் பயக்கும். இவைகளையும் அறிவினால் நலப்படுத்தலாம்.

8. கர்மபந்த நிவிர்த்தி சாதனங்கள்:— மனிதன் இச்சையால் கர்மம் செய்யப் பிரவிர்த்திக்கிறான். இச்சையே பந்தத்திற்குக் காரணம். இச்சையை ஒழிப்போமானால், ஜனன மரணத்திற்கு ஹேதுவான கர்ம பந்தத்தை அறுத்துவிடலாம். எந்த மனிதனும் ஸ்வாதந்தரியத்தை அபேக்ஷிப்பானே அன்றி, கட்டுப்பட சம்மதியான். இச்சை பந்தப்படுத்துகிறது. இச்சையின்றி கருமமில்லை. எவராயினும் கருமத்தை க்ஷணப்பொழுதேனும் செய்யாமலிருக்க ஸாத்தியமாகாது. (ப.கீ. 3 அத்-5 சுலோகம்.) ஆகையால் கர்மத்தைச் செய்யும்பொழுதே அதன் பந்தத்திற்குள்ளாகாத வழியைத் தேட வேண்டும். அஃதெப்படியெனில், பலாபேக்ஷையின்றி கருமம் செய்வதேயாம். "நான் செய்கிறேன்" என்பதை மறந்து, ஈசுவராஞ்ஞையால் ஏற்பட்ட கடமையாக நினைத்து, பலாபேக்ஷ சிறிதுமின்றி எவன் கர்மத்தைச் செய்வானோ, அவனைக் கர்மம் பந்தப்படுத்தாது. அந்த மனிதன் தான் ஆனந்தத்தை யடைவான். நிஷ்காம கர்மத்தைச் செய்வதாலுண்டாகும் ஆனந்தானுபவத்திற்கு மேற்பட்ட ஆனந்தம் கிடையாது. ஏனெனில், அது ஈசுவரத்தன்மையுள்ளது. ஜகதீசன் யாதொரு பலாபேக்ஷையின்றி அகண்ட, அசிந்திய, அநிர்வசநீய, நித்ய சாசுவத ஸ்வபாவத்தினனாயினும், தன்னைக் காலம், இடம் முதலான வரம்புகளுக்குட்படுத்திக்கொண்டன்றோ இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கிறான்! அவ்வித நிஷ்காம கர்மங்களைச் செய்வதால் கிரியமாண கர்மங்கள் இவனைத் தொடரமாட்டா. பிராரப்த கர்மத்தின் பலன்களை யாராலும் தவிர்க்கமுடியாது. இந்த ஜன்மத்தில் ஸத்கர்மங்களையே செய்தவரும் அநேக மகான்கள் படும் கஷ்டங்கள் பிராரப்த கர்ம பலன்களோ

யாம். எவ்விதம் நாணிலிருந்து விடுபட்ட அம்பானது லக்ஷியத்தைத் தாக்கியே நிற்குமோ, எவ்விதம் கையை விட்டுப் போன கல்லானது கீழே விழுந்தே தீருமோ, அவ்விதம் பலன்களைக் கொடுக்க ஆரம்பித்த (பிராரப்த) கர்மாவானது அதன் அனுபவத்தைக் கொடுத்தே தீரும். ஸஞ்சித கர்மத்தை ஞானாக்னியால் சாம்பராக்கலாம். (ப. கீ.) இது ஞானிகளுக்கும் திரிலோகத்திலும் பிரஞ்ஞையுடன் சஞ்சரிக்கிறவர்களுக்கு மட்டுமே சாத்தியம். ஏனெனில், நாம் முந்திய ஜன்மாந்தரங்களில் எண்ணங்கள் மூலமாகவும், இச்சைகள் மூலமாகவும், இவைகள் சம்பந்தமான கிரியைகள் மூலமாகவும் எவ்வெவர்களுடன் கட்டுப்பட்டிருக்கிறோமோ, அவ்வவர்களை அந்தந்த ஸ்தானங்களில் நிற்கக் கண்டு அவர்கள் சம்பந்தப்பட்ட பற்று வரவுகளை நேர்மைப்படுத்திக்கொள்வது சாத்தியமாகும். முன் ஜன்மத்தில் சிஷ்யனாக ஏற்றுக்கொண்ட ஒருவனுக்கு இந்த ஜன்மத்தில் அவன் மனது ஸரியான ஸம்ஸ்காரத்துடன் கூடியதல்லாததாயிருந்தும் ஒரு மஹாத்மாவானவர் தன்னுடைய பந்த நிவிர்த்திக்காக திடீரென்று அவன் முன் தோன்றி உபதேசித்துப் போனாரென்று நாம் கேட்டிருப்பதை ஒரு உதாஹரணமாகக் கொள்ளலாம். இங்ஙனம் ஸஞ்சிதமும் தொலையும்.

௯. அர்ச்சுனன் மஹாபாரத யுத்தாரம்பகாலத்தில் ஸ்வஜனங்களைக் கொல்வோமாவென்று விஷாதமடைந்த பின்பு விசுவரூப தர்சனம் வரையில் சாதாரண சிநேகிதனாகக் கொண்டு சம்பாஷித்ததும், தான் முற்றிலும் ஆஸக்தனாக இல்லாததும், பூர்ணமான ஞானத்தையடையாத காரணமேயாம். பின்னர் எப்படி "என்னுடைய மோகம் தீர்ந்தது. ஸ்மரணையை யடைந்தேன்; ஸந்தேகம் தீர்ந்து ஸ்திரபுத்தி கிடைத்தது. தங்கள் ஆஞ்ஞைப்படி நடப்பேன்" என்று உண்மையை உணர்ந்து சொன்னானோ, அவ்விதமே நாமும் ஸ்திரபுத்தியுடன் முற்றிலும் பற்றுக்களைத் திரிகரணங்களாலும் தியாகம் செய்து, சிறிதும் பலாபேக்ஷையின்றி சுருதி,ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட கருமங்களை நடத்தி ஈசுவரார்ப்பணம் செய்து கர்மபந்தத்தினின்றும் விடுபடும் வழியை ஸதாகாலமும் தேடுவோமாக.

ஓம் தத் ஸத்.

ஒரு நண்பர்.

# ஜாதி சம்பந்தமான துரபிமானமும் கனந்தங்கிய பாவல் என்பாரின் விவாக விஷயமான மசோதாச் சட்டமும்.

---

1. ஒவ்வொரு தேசத்திலும் உள்ள ஜாதிகளை ஆராய்ந்து பார்க்குமளவில், கலப்பில்லாமல், ஒரு ஜாதியும் தனிப்பட இருந்திருக்கவில்லை என்றும், பலவாறான ஜாதிகள் சேர்ந்து ஒரு தேசத்தாராக அமைகிறார்களென்றும், அவர்களுக்குள் கொள்வினை கொடுப்பினை ஏற்பட்டே தீரும் என்றும், தெரியவரும். இருக்கின்ற சுற்றம், ஜனசமூகத்தின் உயர்ந்த லக்ஷியங்கள், மனோ பாவங்கள் ஒரே இடத்திலிருக்கும் பல ஜாதிகளை ஒரே தேசத்தாராக ஒருங்குசேர்க்கும் இயல்பின. நாளடைவில், அவர்களின் பிரஞ்ஞா பூமியில் ஒரே தன்மையான சிந்தனைகளும், அபிப்பிராயங்களும் அவர்களுள் நடைபெற ஏதுவாகின்றன. சரீர வேற்றுமைகள், இடத்தினாலும், காலத்தினாலும், வர வர மாறி மறைகின்றன. உதாரணமாக, இந்தியா தேசத்திலுள்ள பிராமணன் சில வருஷங்கள் கொழும்பில் வசிப்பானாகில், முற்றும் மாறினவனாக ஆகிறான்.

2. மேலும், நம் இந்தியா தேசத்தில், ஆரியர்கள் என்றும் அனாரியர்கள் என்றும் அவர்களுள் அவாந்தர பேதங்களான 4,000 க்கு மேற்பட்ட ஜாதி பேதங்களும் இருக்கின்றன. அவைகள் உண்மையில் தேசத்தின் க்ஷேமம் பயக்கும் இயல்பினவா அல்லவா என்று ஆராய்வோம், ஸ்தூல சரீரம் முக்கியமா அல்லது சூக்ஷ்ம சரீரமாகிய மனோமய விஞ்ஞானமய கோசங்கள் முக்கியமா? பகவத்கீதையில் பகவான், குணகர்மங்களால் 4 வர்ணங்கள் உலகத்தில் ஏற்படுத்தப் பெற்றன என்று, உபதேசித்துள்ளார். அந்த திவ்விய உபதேசத்தைச் சிந்திக்குமளவில், வர்ணங்களின் வியவஸ்தை சூக்ஷ்ம சரீரத்தைப் பற்றியதேயாகும் எனத் தெரியவரும். மேலும், மஹாபாரதயுத்தத்திற்குப்பிறகு, வர்ணசங்கிரகம், அதாவது ஜாதிக்குழப்பம் நம் தேசத்தில் விஸ்தாரமாக ஏற்பட்டிருக்கவேண்டுமென ஊகிக்க இடமுண்டு. இலக்ஷக்கணக்கான புருஷர்கள் அந்த யுத்தத்தில் மாண்டார்கள். ஆயிரம் வருஷமாய், அன்னிய தேசத்தின் ராஜாக்களின் படையெடுப்புக்கள் நம் தேசத்திற்கு ஏற்பட்டு, பல ஜன

ங்கள் நம் தேசம் குடியேறி உள்ளார். உயர்ந்த வர்ணத்தினர்களின் மனச்சுபாவங்களைப் பார்த்தால், அவை தடுமாற்றம் பெற்று இருக்கின்றன. மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் சொல்லுகிறபடி, பிராஹ்மண சரீரத்தில் சூத்திர ஜீவாத்மாவும், சூத்திர சரீரத்தில் பிராஹ்மணஜீவாத்மாவும், தங்கியிருக்கின்றமையைப் பார்ப்போம். மனுதர்மசாஸ்திரத்தில் கண்ட பிராஹ்மண முகத்தின் அமைப்பையும் அதன்கண் விளங்கவேண்டும் தேஜஸையும் இக்காலத்திய பிராஹ்மணர்களில் 100-க்கு எத்தனை பெயர்களிடம் பார்க்கலாம்?.

3. காவேரி தீரத்தில் உள்ள பிராஹ்மணன் திருவனந்தபுரம் இலாகாவில் சில வருஷம் ஜீவிப்பானாகில், சரீர அமைப்பிலும், மனோபாவத்திலும் எத்தனையோ விகாரங்களைப் பெறுகிறான். காஷ்மீரத்தில் உள்ள பிராஹ்மணர்களினுடையவும் திருநெல்வேலி பிராஹ்மணர்களுடையவும், முகக்குறிகளை ஒப்பிட்டுப் பார்க்குமளவில், வித்தியாசங்கள் பல தோன்றும். அவ்விதமே அவர்களின் ஆசாரங்களும் வித்தியாசப்படும். நாம் கவனிக்கவேண்டுவது ஹிந்துமதத்தின் முக்கிய அம்சங்களான உயர்தர லக்ஷியங்களும், மனோபாவங்களும் அவர்களிடம் இருக்கின்றனவா அல்லவா என்பதை மாத்திரம் ஆராயவேண்டும். மேலும் முன்போலஇல்லாமல் இப்போது நம் தேசத்தின்ஜனங்கள்பலவாறாக ஒருவரோடொருவர் அநேகசம்பந்தங்களைப்பெற்றுவருகின்றார்கள். ரயில்வண்டியின் சௌகரியத்தாலும் போஸ்டாபீஸ், தந்தி, தபால்சௌகரியத்தாலும் ஆங்கிலபாஷையின் படிப்பினாலும், வர்த்தமானங்களாலும், பத்திரிகைகளாலும் நம்தேசத்தின்பலநாட்டிலுள்ள ஜனங்களின் மனோபாவங்களின் வேற்றுமைகள் வரவரக்குறைவுபட்டுவருகின்றன. சிலவிஷயங்களைப்பற்றியாவது, ஜனங்களுடைய சிந்தனைகள் ஒருமைப்பட்டுவருகின்றன. இந்தியாதேசமுழுமையும் சிற்றரசநாடுகள் உள்பட எல்லாம் ஒரே இராஜாங்கத்துக்குட்பட்டிருக்கின்றது. இந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டும்.

4. மனுவால் வகுத்த 4 ஜாதிகள் 4000க் கணக்கான ஜாதிகளாக இப்போது பிரிந்திருக்கின்றன. இவைகளுக்குள் விவாக முறையில் கொள்வினை கொடுப்பினை இல்லையாம். விவாகசம்பந்தங்கள் வரவரக்குறுகி நெருங்கிய ரத்த பந்துக்களுள் நிகழ்கின்றன.

மநுதர்ம சாஸ்திரத்தில் ஏற்பட்டிருக்கிறபடி தாய்வழியில் ஐந்தும் தகப்பன் வழியில் ஏழும் தலைமுறைகளுக்கப்பால் விலகியிருக்கின்ற ஸ்திரீ புமான்களுக்குள் விவாகம் நிகழவேண்டியது என்ற வியவஸ்தை இக்காலத்தில் தடுமாற்றமாய்ப் போய்விட்டது. மநுவால் நிஷேதிக்கப்பட்ட சம்பந்தங்களான மாமன், அத்தை, தமக்கைகளின் புத்திரிகள் விவாகத்திற்கு அருகர்களாக ஏற்பட்டும் அம்முறைகளுக்குள், பிராஹ்மணர் முதலான எல்லா ஜாதியார்களுக்குள்ளும் சாதாரணமாய் விவாகங்கள் நடத்தப்பெறுகின்றன. திருமங்கலம் இலாகாவிலுள்ள ரெட்டிநாயக்கன்மார் ஜாதிகளில், இம்முறைகளில் ஏற்படும் விவாகங்கள் தான் உரித்தானவைகளென்றும், உயர்ந்தவைகளென்றும் மதிக்கப்படுகின்றன. பெண்ணுக்கு 20 வயதும் பிள்ளைக்குப் பன்னிரண்டுவயதும் இருக்கும் காலத்தில் இஜ்ஜாதியார்கள் விவாகம் செய்வது சகஜமாயிருக்கின்றன. சில சமயங்களில் தகப்பன் வயதுள்ள குமாரர்களையும் பார்க்கலாம்!

5. ஜாதிகள் குறுகிக்கொண்டுவர, அஜ்ஜாதியார்களுக்குள் விவாகசம்பந்தங்கள் நிகழ்வதினால் காலாந்தரத்தில் அஜ்ஜாதிகள் க்ஷீணித்தும் போவதற்கு இடமுண்டு. உதாரணமாக சிதம்பரத்தில் 3,000 தீக்ஷித குடும்பங்கள் இருந்ததாகப் புராணவாயிலாக அறிகிறோம். இப்போது 150 குடும்பங்களுக்கு மேல் இருக்கின்றனவாகத் தெரியவில்லை. சமீப பந்துக்களுக்குள்ளேயே சம்பந்தம் நிகழ்ந்தமையால், தில்லை மூவாயிரத்தார் என்ற ஜாதியார் குறைந்து போய்விட்டார்கள். கோவில் பூஜகர்களான குருக்கள், நம்பிகள் முதலிய ஜாதிகளும் இக்கதியை விரைவில் அடைந்துவருகிறார்கள்.

6. நான்கு பெரிய வர்ணத்தார்களும், அகம்பாவத்தினாலும், அறிவின்மையாலும் அவர்களுள் உண்டாயிருக்கின்ற அவாந்தர ஜாதி உள்வகுப்புக்களைத் தொலைத்தும் அந்தந்த வர்ணத்தின் தூர சம்பந்தங்களில் விவாகங்கள் நிகழும் பக்ஷத்தில், தேக தாருட்டியமும் மநோபலமும் உள்ள சந்ததிகள் ஏற்படும். அவாந்தர வகுப்புகளுக்குள் விவாஹ சம்பந்தங்கள் சட்டப்படி நிகழக்கூடுமா என்பதைப்பற்றிய சந்தேகம் இப்போது Govt. of India, Legislative Council என்ற சட்ட நிர்மாண சபையில் கனந்தங்கிய பாஸு

என்பார் தயாரித்துக்கொணர்ந்திருக்கிற விவாஹ மசோதாச் சட்டத்தினால் விலகக்கூடியதாகவிருக்கிறது. அந்தச் சட்டம் சிலாமணியாகும்பக்ஷத்தில், நம் தேசத்திற்கு நலமுண்டாகுமேயல்லாது, கெடுதி நேரிடாது, என்பது நமது நிச்சயமான அபிப்பிராயம். அச்சட்டத்தினால் நம் தேசத்திற்குக் கெடுதியே நேரிடும் என்றும், ஹிந்து மதமே சுத்தமாய் அற்றுப்போய்விடுமென்றும், சிலர் நினைக்கும் நினைப்பு வீணே! அவ்வித பயம் வேண்டுவதேயில்லை! தேசம் நலம் பெற வேண்டுமானாலும், தேசத்திலுள்ள ஜனங்கள் ஊக்கம், வீரியம், பலம், ஆகிய மனோதர்மங்களைப் பெறவேண்டுமானாலும், நீ வேறு, நான் வேறு என்ற எண்ணத்தை விருத்திசெய்யும் இயல்பினதாயுள்ள ஆயிரக் கணக்கான ஜாதிப் பிரிவுகள் முற்றும் தொலைய வேண்டும். இந்தியாதேச முழுமையும் ஒரே ஜனசமூகமாக வாழ வேண்டும் என்ற கருத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் முறையில், கனந்தங்கிய பாஸூ என்பவர்களின் சட்டமானது, முதன்மையான சாதநமாகும். வர வர ஜனங்களுள் பலவிதத்தால், அதாவது முன்னரைவிடச் சுலபமாய் நடைபெறும் தேச யாத்திரையாலும், பலவாறான வியாபாரங்களாலும் ஒருவரோடொருவர்க்குள் அதிகக் கூட்டுறவு ஏற்பட்டுக்கொண்டு வருகின்றமையால், தேசம், ஜாதி என்ற வேற்றுமைகள், விவாகமுறைகளின் பெரிய தடைகளாக இனி முன்னிற்குமென்று தோன்றவில்லை. அத்தடைகளை நிவிர்த்திப்பதற்கு அநுகூலமான முறைகளைச் சட்டநிர்மாண சபையால் ஏற்படுத்தல் நலமென்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அக்கருத்தின் பயனாய்ப் பாஸூ என்பவர்களின் மசோதாச்சட்டம் வெளிவந்துள்ளது. இச்சட்டத்திற்குச் சட்ட நிர்மாணசபையில் அங்கீகாரம் ஏற்பட்டாலும், ஜனங்களின் அநுஷ்டான முறையில் வருவதற்கு வெகுகாலஞ் செல்லும். இனி நம்தேசத்தின் வருங்கால நலத்தை உத்தேசித்து இச்சட்டம் ஏற்படுகின்றமையால் அறிவுள்ளவர்கள் இதை ஆக்ஷேபிக்கமாட்டார்களெனக் கருதுகின்றோம். ஒருவர் அபிப்பிராயப்படி, இச்சட்டத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கு இராஜாங்கத்தார் அனுமதி கொடுக்கு முன்னர், இந்தியா தேச முழுவதும் உள்ள ஜனங்களின் அபிப்பிராயத்தை (Vote) வோட் எடுத்தல் மூலமாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதாம்.

இது இலகுவான காரியமன்று. அறிவின்மையாகவும் முடியும். பெரும்பான்மையான ஜனங்கள் விரிந்த அனுபவமும், ஆழ்ந்த ஞானமும் இல்லாதவர்கள். அவரவர் அடுக்குள்ளுக்குப் புறம்பாக உள்ள விஷயங்களைப்பற்றிச் சிந்தனைகொள்ளும் யோக்கியதையற்றவர்கள். பெரும்பான்மையான ஜனங்களின் அபிப்பிராயப்படி உலகம் நிகழவேண்டுமாகில் ஞானமும் நீதியும் அற்றுப்போம். மௌட்டியமே உலகத்தை ஆளும். உலகம் மனித மிருகங்கள் வாழும் இடமாக முடியும். இக்கருத்தைக் கொண்டன்றே தொல்காப்பிய நாயனாரும் "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" எனக் கூறியிருக்கின்றார். அதாவது உலகத்தார் என்றால் உலகத்தில்வாழும் அறிஞரென்று தாத்பரியமாம். உலகத்தை நடத்துவது அறிஞர்களேயல்லாது, அறிவிலா மூடர்களல்லர். மேலும் பாஸ-என்பார் கொணர்ந்திருக்கும்சட்டமானது ஒரு ஜாதிவிட்டு வேறு ஜாதியில் விவாகம்செய்வது குற்றமல்லவென்றும், சட்ட விரோதமல்லவென்பதற்கு மாத்திரம் அனுமதி கொடுக்கின்றதே யல்லாமல், அவ்விதம் விவாகம் செய்யவேண்டுமென்று ஒருவரையும் கட்டாயப்படுத்துகிறதில்லை. அதனால் நம் தேசத்தில் முன்பின் யோசிக்கும் அறிவுள்ளவர்கள் இம்மசோதாச் சட்டத்திற்கு ஆதரவுசெய்வார்களென நம்புகிறோம்.

ஆத்மநாதன்.

---

## நன்மொழி.

---

104. நித்தியமானது, என்றுமுளது, ஆத்மா ஒன்றே. அநித்தியமானது அனாத்மாவான பிரகிருதியே. நித்தியமான வஸ்து இன்னதென்று நன்றாய் ஆராய்ச்சி செய்யவேண்டும். அதன்மேல் தெளியவேண்டும். பின்பு அதன்மேலேயே சிந்தனை கொள்ளவேண்டும். முதன்மையில் ஆத்மா இன்னவை அல்லவென்று அறியவேண்டும். "ஸ்தூல சரீரமாகிய அன்னமயகோசம் நான்(ஆத்மா) அல்லன். அது 6 வித விகாரங்களை உடையது. ஆத்மா விகாரமற்றவன் என்றும், ஒரே தன்மையன் என்றும், அவ்விதமே பிராணன், மனசு, விஞ்ஞானம், ஆநந்தம் இவைபற்றிய கோசங்கள் நான் அல்லன் என்றும்" இவ்விதம் சிந்தித்தற்பாலது. இவ்விதம் நான் யார் எனத் தெரிந்துகொள்-

# இரதோத்ஸவம்.

---

1. பிரதி தேவாலயத்திலும் வருஷத்திற்கு ஒரு தடவை கல்யாணோத்ஸவம் செய்விப்பார்கள். முடிவில் ஸ்வாமிக்கு இரதோத்ஸவம் செய்வித்து இரதாரூடராக இருக்கும் ஸ்வாமியைச் சேவித்துப் பக்தகோடிகள் ஆனந்திப்பார்கள்.

"𑌰𑌥𑌸𑍍𑌥𑌂 𑌕𑍇𑌶𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇"

என்ற சுலோகத்தை ஸ்மரித்துக்கொண்டு, "இரதத்தின்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியைத் தரிசிக்கின் தங்களுக்கு மீளவும் ஜன்மம் இல்லை" என்பதாக ஆனந்திக்கிறார்கள். மரத்தால் செய்யப்பட்ட ரதம், பஞ்சலோகங்களால் செய்யப்பட்ட விக்கிரகங்கள், இவைகளைத் தரிசித்த மாத்திரத்தில் ஜன்மம் எவ்வாறு இல்லாது ஒழியும்? எவ்வாறு தன்னியர்களாவார்கள்? என்று பலவாறாக அன்னிய மதஸ்தர்கள் கேட்பதும் ஹிந்துக்களில் அநேகர்கள் அவ்விதக் கேள்விகளுக்குச் சரியான பதிலளிக்காததும் ஸம்பவிக்கும். ஆகையால் இரதோத்ஸவம் இன்னதென்பதையும் அதன் பிரயோஜனம் இன்னதென்பதையும் தெரிந்துகொள்வது அவசியமாக இருக்கிறது. கல்யாணோத்ஸவமானது சுருக்கமாகச் சொல்லுமிடத்து பர, அபரப் பிரகிருதிகளுடையவும் பரமாத்மாவினுடையவும் சேர்க்கையாலே புலப்படுவதும் புலப்படாததுமாயுள்ள ஸமஸ்த பிரபஞ்சங்களும் பரமாத்மாவினால் நிறைந்துஇருப்பதைப் பிரதிகப்படுத்தி, சாதாரண ஜனங்களுக்கு அறிவிக்கின்றது. இந்த விஷயம் இங்கு கீழ்வரையப்பட்டிருக்கும் விவரத்தால் தெளிவாகின்றது.

𑌮𑌯𑌾 𑌤𑌤𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾 ।
𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

(ப. கீ. 9-வது அத்யாயம் 4-வது சுலோகம்).

𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ।
𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

(ப. கீ. 15-வது அத்யாயம் 17-வது சுலோகம்).

மத்த: பரதரம் நாந்யத்கிஞ்சிதஸ்தி தனஞ்சய।
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ॥

ப. கீ. 7-வது அத்யாயம் 7-வது சுலோகம்.

2. பக்த சிரேஷ்டனான பிரஹ்லாதனுடைய வசனம். "இந்து கலடு அந்துலேதனு, ஸந்தேஹமுவலது சக்ரி, ஸர்வோபகதுண்டு எந்தெந்து வெதகி ஜூசின, நந்தந்தே கலடு விஷ்ணுவு; தாவாக்ரணி விண்டே."

"பகவான் எங்கும் நிறைந்திருக்கிறார்" என்ற விஷயத்தை எவரும் ஆக்ஷேபிக்கார். ஆகையால் இவ்விஷயத்தில் விசேஷ கிரந்த ஆதாரங்கள் அவசியமிரா. ஸ்தூல சூக்ஷ்மங்களான ஸமஸ்த லோகங்களிலும் பகவான் பரிபூர்ணமாய் இருக்கிறார் என்பதாகச் சொல்லும்பொழுது பிரதி மனிதனிடத்திலும்கூட பகவானிருக்கிறார் என்பதாகப் பிரத்யேகமாய்ச் சொல்லவேண்டுவதில்லை.

3. ஈசுவரன் இவ்வாறு ஸர்வ பிரபஞ்சத்தினிடமும் ஸமஸ்த சேதனா சேதனங்களிடத்தும் வியாபித்திருக்கிறார் என்பதாகப் பெரியோர்கள் சொன்னாலும், அனேக கிரந்தங்கள் கோஷிக்கினும், அந்த உண்மையை அனுபவத்திற்குக் கொண்டுவருவதற்குச் சாமான்ய மனிதர்கள் பிரயத்தனஞ் செய்கிறார்கள் இல்லை. ஏனெனின், பிரதி மனிதன் செய்யும் பிரயத்தனமும் தன்னைச்சுற்றிலுமுள்ள ஸ்தூல சூக்ஷ்ம லோகங்களில் கிடைக்கக்கூடிய விஷய சுகங்களின் நிமித்தமாகவே நிகழ்கிறதே ஒழிய, ஆத்ம சாக்ஷாத்காரத்தை அடைந்து ஜனன மரண ரூபஸம்சாரத்தினின்று நிவிர்த்தி அடைவதற்குப் பிரயத்தனஞ்செய்பவர்கள் வெகு அருமையாக இருக்கிறார்கள்.

4. ஆகையால், ஸ்தூல சூக்ஷ்மமான பிரபஞ்சத்தினிடத்தும் அக்காரணத்தாலேயே மனிதன் தன்னிடமுள்ள ஆத்மாவை ஸாக்ஷாத்காரஞ்செய்துகொண்டு புநர்ஜன்மத்தைத் தவிர்க்கவேண்டுமென்பதைப் போதிப்பதற்காகவே, உண்மைகளைப் பண்டிதர், பாமரர் எல்லாருக்கும் தெரிவிக்கும் கருத்தைக்கொண்டே, இரதோத்

ஸவதனைத ரிஷிகளேற்படுத்தினார்கள். இங்கு இரதத்திற்கு அன்வயமாக ஜகத்தையாவது ஜீவனுடைய உபாதியையாவது எடுத்துக் கொள்ளலாம். அவ்வித இரதத்தில் அமைக்கப்படும் விக்கிரஹங்களே ஜகத்தில் நிறைந்திருக்கும் சமஷ்டியாய் நோக்கில், பரமாத்மா வென்றுவது, ஜீவோபாதிகளிடத்து வியஷ்டியாய் நோக்கில், ஜீவாத்மா வென்றுவது, என்றுமிடத்து, இரதத்தின்கண் அமைக்கப்படும் விக்கிரஹங்களைப் பிரத்யக்ஷமாகத் தரிசிப்பதுபோல், மனிதனும் தனது உபாதியாகிய இரதத்திலுள்ள ஆத்மாவைச் சாக்ஷாத்காரஞ் செய்துகொள்ள இயல்வதாலும், ஜகத்தான இரதத்திலுள்ள பரமாத்மாவைக்கூட ஸாக்ஷாத்காரஞ் செய்துகொள்ள இயல்வதாலும், புநர் ஜன்மம்இல்லாது ஒழியுமெனஅறிக. இரதமெனின் சரீரமென்றும் அர்த்தம். ஜகத்திலுள்ளஆத்மாவேறு, தன்னிடமுள்ளஆத்மாவேறு என்று எண்ணப்படாது. ஜகத்வியாபகமாயிருக்கும் பரமாத்மாவைத் தன்னிடமுள்ள ஆன்மாவாகப் பாவிக்கவேண்டும். தன்னைத்தானறியின், எல்லாவற்றையும் அறியமுடியுமென்று உலகத்தில் வழங்கும் பழமொழி எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனாலும், தன்னைத் தானறிய முயற்சிப்பவர்கள் மிகவும் சிலர்தான். தன்னைத்தானறிந்து ஆராதிப்பவர்களே, இரதோத்ஸவத்தினுடைய உண்மையை அறிவார்கள்.

"ஆத்மாநம் ரதிநம் வித்தி ஶரீரம் ரதமேவ து॥"

என்ற உபநிஷத்தின் வாக்கியத்தை அனுசரித்து சரீரத்தின்கண் உள்ள ஆத்மா சாக்ஷாத்காரமாவதாலேயே "ரதஸ்தம் கேசவம் திருஷ்ட்வா புனர்ஜன்மம் நவித்யதே" என்ற பலம் சித்திக்கும்.

5. இரதோத்ஸவத்தினுடைய ரஹஸியார்த்த மிதுவே. இவ்வாறிருக்க, இப்பொழுது செய்யப்பெறும் ரதோத்ஸவங்களும் கல்யாணோத்ஸவங்களும் வியர்த்தமென்பதாகத் தோன்றக்கூடும். அது அவ்வாறு விபர்த்தமாகமாட்டாது. ஆத்மா ஸர்வதத்திலும் வியாபித்திருப்பதால், அந்த விக்கிரஹங்களிடத்தும் வியாபித்திருக்கின்றது. ஆகையால் அந்த விக்கிரஹங்களிடத்து பகவானிருக்கிறார் என்பதாகப் பூஜிக்கின் லாபமே ஒழிய தோஷமில்லை. அதுவுமன்றி, ஒரு மகாத்மியமும் உண்டு. ஆத்மா ஸர்வவியாபியாயிருக்கினும், ஆத்மாவின் பிரபை நம்மெல்லோருக்கும் அகப்படுவதில்லை. காஷ்டத்

தினிடம் மறைவாயிருக்கும் அக்கினி அரணிக் கட்டையைக் கடைவதால் வெளிப்படும் மாதிரியாக, ஸர்வவியாபியாகி வியக்தமாகாமலிருக்கும் ஆன்மசக்தியை, மந்த்ரயந்த்ரங்களாலே, நமது பூர்விகர்களான ரிஷிகள் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். திருப்பதி, இராமேசுவரம், காஞ்சிபுரம், காளஹஸ்தி, ஸ்ரீசைலம் முதலான புண்ணியஸ்தலங்களிலுள்ள தேவாலயங்களிலுள்ள விக்கிரஹங்கள் இவ்விதம் பிரதிஷ்டை செய்யப்பெற்றவைகளே. அக்காரணத்தினாலேயே இவைகளைச் சேவிப்பதற்கு அநேக தேசங்களினின்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினம் போய் மனோபீஷ்டங்களை அடைந்தவர்களாகித் தேவாலயங்களிலுள்ள விக்கிரகங்களைச் சேவிப்பதினாலே, கெட்ட சங்கற்பங்கள் ஒழிந்து பக்தி வைராக்கியங்கள் விருத்தி அடைந்து தன்னியர்களாகிறார்கள். தேவாலயத்திலுள்ள விக்கிரஹங்கள் மந்த்ர பூர்வமாகப் பிராணப்பிரதிஷ்டை செய்யப்பட்டு இருப்பதால், ஈசுவர சக்திகள் அந்த விக்கிரஹங்களினிடம் பிரபலப்பட்டு வியக்தமாகிக்கொண்டிருக்கும். அவ்விதசக்தி திடபக்தியாலும், நிர்மலமான ஹிருதயத்தாலும் விருத்தி செய்யப்பெறும். அர்ச்சனைகளாலும் பலப்பட்டுக்கொண்டிருக்கும். ஸ்வாமியைச் சேவிக்க விருப்பமுடையவர்கள் ஆலயங்களுக்குச் செல்லும்பொழுது, தீய எண்ணங்களை விட்டொழிந்து பக்தியுடையவர்களாகி, ஆலயத்தில் பிரவேசிக்கின் அந்த ஈசுவர சக்தி குறையாமல் பரிசுத்தமாக இருந்து, அந்த ஆலயத்தின் சுற்றுப்பக்கங்களில் வியாபித்து, அங்குள்ள ஜனங்களுடைய மனத்தைக் கிரமக்கிரமமாகப் பரிசுத்தஞ்செய்து பக்தி, ஞான, வைராக்கியங்களை உண்டாக்கும். மேலும் அந்த விக்கிரஹங்களை நன்றாய் அலங்கரிப்பதனாலே, சஞ்சலமாக இருக்கும் மனமானது ஆகர்ஷிக்கப்பட்டுச் சிறிதுகாலம் அந்த மூர்த்தியினிடம் பக்தி உண்டாகி நிரந்தரமாய் இருக்கப் பிராப்தமாகும். ஆகையால் ஸர்வவியாபியாயுள்ள ஆத்மாவின் சாக்ஷாத்காரத்திற்கு மந்த்ர பூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விக்கிரஹ ஆராதனை பெரிய சாதகமாயிருக்கிறது. ஆகையால் கல்யாணோத்ஸவங்களுடையவும், இரதோத்ஸவங்களுடையவும், ரஹஸ்யார்த்தத்தை அறிந்து, அவைகளைப் போதிப்பதற்கு உலகத்தில் பிரத்யக்ஷமாக நடத்தப்பட்டுவரும் உத்ஸவங்களைச் சாதகங்களாகக் கைக்கொண்டு ஸர்வஜனங்களும் முக்தர்கள் ஆவார்களாக.

வி. இராமச்சந்திர நாயக்கர்.

# வண்டுமாங்கனி.

நல்ல மாங்கனிகளில், உயிருடன் வண்டுகள் அக்கனிகளை அறுக்கும் காலத்தில் வெளிவருதலைக் காண்கிறோம். கனிகள் வெளிப் பார்வையில் யாதொரு துவாரமுமின்றி இருக்கின்றன. வண்டுகள் எவ்விதம் அவைகளுக்குள் நுழைந்தன என்பதைச் சற்று விசாரிப்போம்.

மாமரங்கள் புஷ்பிக்கும் காலத்தில் வண்டுகள் புஷ்பங்களிலுள்ள தேனை உண்ண நாடுகின்றன. கருத்தரித்த பெண் வண்டுகள், கருவை வைக்க இடம் தேடுகையில், நல்ல ஜாதி மாங்கனியுண்டாம் புஷ்பங்களை நாடி அவைகளில் காய்ப் பூ (பெண் பூ)க்களில்,கருவை வைத்துவிடுகின்றன; பின்பு காய் பருத்துப் பழமாகிறது. அக்காயின் உள்ள விதைக்குள் முன்வைக்கப்பெற்ற வண்டின் கருமுதன்மையில் முட்டை வடிவமாக இருந்து, பின்பு புழுவாகி, அப்புழு, மாவித்தின் சில பாகத்தை உண்டு விருத்தியடைந்து, குழவிபோன்ற ஓட்டுப்புழுவாகி, அந்நிலையில் கொஞ்ச காலம் தங்கி, பின்பு இறகுகள் அமைய, பறக்க சந்நத்தமாகிவிடுகிறது. மாங்காயாக இருக்குமளவில், அது பறந்து வெளியேறி வரக்கூடாமையாக இருக்கிறது; பின்பு காய் கனியாகவே, அதை இலகுவாய்த் துளைத்துக்கொண்டு வெளியேறுகிறது. சில சமயம் பழுத்தும் பழக்காமலுமிருக்கில், நாம் பழத்தை அறுத்தோமாகில், அதனின்று, தன் சிரமமின்றி, இந்த வண்டு வெளியேறுகின்றதைக் காண்போம். வண்டு மாம்பழம் எல்லாம் அதிக ருசியாக இருக்கும். ஆகவே, வண்டு உள்ள பழம் என்பது, அப்பழத்தின் நலத்தைக் காட்டும். அஃது அறிகுறியாம். இனிப்பான பழம் உண்டாகும் மாமரத்தின் புஷ்பத்தை நாடும் வண்டின் அறிவு இங்கு கவனிக்கத்தக்கது. மேலும், தன் கருவெடித்து அதனின்றுஉண்டாகும் தன் குழந்தையான புழு, அதன் அசக்த நிலைமையில் உண்ணும்படி உணவான மாவித்தின்கண் தன் கருவை வைக்கும்படி சிந்தனைகொண்ட வண்டின் அறிவு இன்னும் மெச்சத்தக்கது. இறைவன் அறிவு மயன் என்கிறோம். ஈசுவர சைதந்நியம் எங்கும் வியாபித்துள்ளது, என்கிறோம். பிராணி வர்க்கங்களான ஜங்கமத்தையும், ஓஷதி வர்க்கங்களான ஸ்தாவரத்தையும் நன்றாய்ப் பொறுமையுடன் ஆராய்ச்சிசெய்வோமானால், மேற்கண்ட உண்மையை உணர்வோம். இதனால்தான், "தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு" என்றார் திருமூலர்.

ப. நா.

## புத்தகவரவு.

**கிள்ளைவிடுதூது:**—இது யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் பிரஹ்மஸ்ரீ அ. வரதபண்டிதர் குமரக்கடவுளின்மேல் இயற்றியது. அரும்பதங்களுக்கு அர்த்தம் பக்கங்களின் அடியில் உள்ளது. இத்தகைய புத்தகங்கள் இக்காலத்தின் இயல்புக்கு எற்றவைகள் அல்ல. இதை வேண்டுவோர் சுன்னாகம் வ. மு. இரத்திநேசுவரய்யரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் இதன் விலை 10 சதம்.

**கண்ணகி கதை:**—இது பெயர்போன தமிழ்ப் பஞ்சகாவியங்களில் ஒன்றான, சிலப்பதிகாரத்தின் கதை. வசனரூபமாக அழகான எளிய தமிழில் எழுதியுள்ளது. இதன் விலை 6 சதம். மேற்படியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தமிழ் வியாசங்கள்:**—இது மதுரை முன்சிபாலிடி யாதவர் பாடசாலையின் பிரதம உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ எம். வி. ரங்கஸ்வாமி அய்யர் அவர்கள் இயற்றியது. இஃது உயர்தர பாடசாலைகளிற் கற்கும் மாணவர்களுக்கு நனிப் பிரயோஜநமானது வியாசம் எழுதும் முறையை வெளியிட்டும், அம்முறையைத் திருஷ்டாந்தரூபமாகக் காட்டியும், ஆன்றோர் பாசுரங்களை மேற்கோளாகப் பல சமயங்களில் எடுத்து உபயோகித்தும் எளிய தமிழில் சந்தியின்று நன்றாய் இப்புத்தகம் அமைந்துள்ளது. சில சொற்பிழைகள் இருக்கின்றன. இவைகளைத் தவிர்த்தும் ஒருமுறை ஆராய்ச்சி செய்யப்பெற்றும் இருக்குமாயின், இஃது உயர்நலமுள்ள நூலாகும். இதன் விலை அணா 12, அதிகமில்லை.

## பத்திரிகை வரவு.

**வைசியமித்திரன்:**—இது பிரதி சோமவாரந்தோறும் தேவகோட்டையில் பிரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகை. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் என்ற நகரத்தார்களின் அபிவிருத்தியை முக்கியமாகக் கருதியுள்ளதாக இப்பத்திரிகை நடைபெறுகிறது. அவர்களுள்ஒருவரான ஸ்ரீமாந் S. T. R. M. இராமநாதன் செட்டியார்அவர்கள் இதன் பத்திராதிபர். அதன் எட்டு சஞ்சிகைகளைப்படித்தோம், ஆநந்தித்தோம், இதன்கண் செவ்வனவே எளிய தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ள வியாசங்கள் வெளிவந்திருக்கின்றன. இத்தகைய பத்திரிகை செட்டிநாட்டில், செட்டிகுலத்தில் சேர்ந்தவரால் பிரசுரமாகிவருதல் இனிவரும் நற்காலத்தின் அறிகுறியென நினைக்கிறோம். இப்போது நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் அநேகர் சிறந்த வித்வான்களாக இருக்கின்றார்கள். அவர்களுள் ஒருவர் இப்போது சென்னை ராஜதானியின் சட்டநிர்மாணசபையில் அங்கத்தினராக இருக்கின்றார். இவர்களில் இப்போது தனவைசியராகப் பெரும்பான்மையர் இருக்கின்றார்கள். இவர்களிடம் கல்வி அதிகமாகப் பரவுமாயின், இஜ்ஜாதியார் மேன்மை பெறுதல் மாத்திரமல்லாமல், தேசமே மேன்மை பெறும்படியான உயர்நலம் அமைந்த கைங்கரியங்களை முன்னரைவிட அதிகமாகச்செய்வார்கள்என்பதில்ஐயமில்லை. இத்தகையாருடைய கல்வி அபிவிருத்தி விஷயத்தில் இப்பத்திரிகை பெரிய முயற்சியை எடுத்துப் பாராட்டுமென நம்புகிறோம். இப் பத்திரிகை மேன்மேலும் அபிவிருத்தி அடையவேண்டுமென்பது நம் பிரார்த்தனை.

பத்திராதிபர்.

# சமாசாரம்.

---

**கோஹினூரின் வரலாறு:**—லண்டன்மாநகரில் நடைபெறும் "Rajput" பத்திரிகையின் மேனாள் சஞ்சிகையில், "கோஹினூர்" என்னும் வயிரமணியானது ஐயாயிரத்துப் பதினொரு வருஷங்களுக்கு முன்னர், நம் இந்தியாவில் பிரக்கியாதி பெற்று விளங்கிற்றெனத் தெரியவருகிறது. எப்படியென்றால், இவ்விரத்நம் அசுவத்தாமநுடைய மகுடமணியென்றும், கிரமமாய் ராஜ்யபாரத்தை வகிக்கவேண்டிய புத்திரனைத் தூங்குகையில் கொன்ற பாபத்திற்கு அபராதமாகச் சக்ரவர்த்தினியாகிய திரௌபதிக்கு இந்த வஜ்ரக்கல்லானது அச்வத்தாமரால் கொடுக்கப்பெற்றதென்றும், அதைப் பிறகு திரௌபதி தம் பிரியநாயகராகிய யுதிஷ்டிரருக்கு அவரது மகுடாபிஷேகோத்ஸவதினத்தில் கொடுத்தாரென்றும், பிற்பாடு யுதிஷ்டிர மகாராஜாவிடமிருந்து வம்சபரம்பரையாய் இராஜபுத்திர மன்னர்கள் அடைந்து வந்தார்களென்றும், அப்பால், இராஜபுத்திர அரசாக்ஷி கி. பி. 1193–ல் க்ஷீணகதியடைந்தமேல், மொகலாய அரசர்களுடைய ஆதீநத்தில் அம் மணி போயிற்றென்றும், பின்பு மொகலாயராஜ்யம் கி. பி. 1732-ல் நாதர்ஷா என்னும் பாரஸீக அரசனால் ஜயிக்கப்பட்டமேல் இருதிறத்தாரும் சிநேகமாகி, நாதர்ஷாவும், மோகலாய சக்ரவர்த்தியும் தங்கள் பரஸ்பர நேசத்தை உணர்த்தும்பொருட்டு அறிகுறியாக, மகமதியரது வழக்கப்படி தலைப்பாகைகளை மாற்றிக்கொண்டார்களென்றும், அப்பொழுது மொகலாய சக்ரவர்த்தியால் அவர் தலைப்பாகையும் அதனுடன் அதன்கண் வைத்திருந்த இம் மணியும் கொடுக்கப்பெறும்படி நேரிட்டதென்றும், இவ்விதமாய் நம் புராதநமான மகுடமணி இந்தியாவைவிட்டு வெளிச்சென்றதென்றும், இம்மணி வெளியேறவே மொகலாய அரசாக்ஷியின் யசஸும்போய், அவ்விராஜ்யமும் அதோகதியடைந்தது என்றும், பின்பு நாதர்ஷாவிடத்தினின்றும் அவனது பொக்கிஷதாரரொருவன் கோஹினூர் மணியை யெடுத்து ஆப்கானிஸ்தானத்திற்குச் சென்றமேல் நாதர்ஷாவின் வலி குன்றி, அப் பொக்கிஷதாரன் சிறப்புற்றவனாகி, இந்துதேச சரித்திரத்தில் ஒரு யசஸ்வீயாகவே இருந்திருக்கிறான் என்றும், அப்படியே அவனிடமிருந்து ரஞ்ஜித்ஸிங் என்னும் லாகூர் அரசன் அடைந்து, அவரும் மகிமைபெற்று "லாகூர்ச் சிங்கம்" என்னும் கீர்த்திப்பெயரை வகித்து விளங்கினாரென்றும், இவருக்குப் பின் இவரது இளவரசு, நம் காலஞ்சென்ற மகிமைதங்கிய விக்டோரியா மகாராணியார்க்கு இவ்வுயர்ந்த இரத்நத்தை தம் இராஜபக்தியின் ஞாபகச் சின்னமாக அளித்தனர் என்றும், கோஹினூரென்னும் மணி இந்தியாவின் ராஜ லக்ஷ்மியாக இருந்து காலகதியை நிச்சயிக்கும் ஓர் கருவியெனக் கருதலாமென்றும் ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.


இதைச் சற்று ஆலோசிக்குங்கால், ஸர்வஞ்ஞனான ஈசுவரனே தற்காலத்திய இராஜாங்கத்தாரிடம், நம்தேசத்தின் இராஜ்ய பாரத்தின் பிரதிநிதமாகக் கோஹினூரைச் சேர்த்திருக்கிறாரென்பது அறிவுறுத்தப்படுகிறது. இப்போது மாட்சிமை தங்கிய ஜ்யார்ஜ் சக்ரவர்த்தி அவர்களின் மகுடத்தில் உயர்நலமமைந்த நடுநாயகமாக ஜ்வலித்துக் கொண்டிருக்கும் இம்மணியானது ஆசந்திரார்க்கஸ்தாயியாய் என்றும் விளங்கவேண்டுமென்பதே நம் பிரார்த்தனை.

[தொடர்ச்சி ௧௫௩-ம் பக்கம் பார்க்க.]

# சங்கீதம்.


(64-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடியில் வரைந்திருப்பது வீணையின் தந்தி. அதின் முதலாவது ஸ்வரம் s எனக் குறிப்போம்.




A பாகம் முதலாவது ஸ்தாயி. B பாகம் இரண்டாவது ஸ்தாயி. மொத்தத் தந்தியின் $\frac{1}{4}$ பாகம் m. அதின் $\frac{1}{3}$ பாகம் p. m இடத்தில் விரலை வைத்து அழுத்தி மீட்டினால் பாக்கி தந்தியில் அதாவது மொத்தத் தந்தியின் $\frac{3}{4}$ பாகத்தில் (vibration) நாதம் உண்டாகிறது. அதே விதமாக p இடத்தில் விரலை வைத்து அழுத்தி மீட்டினால் மொத்தத் தந்தியின் $\frac{2}{3}$ பாகத்தில்(vibration) நாதம் உண்டாகிறது. அந்த இரண்டு நாதங்களைக்கொண்டு தந்தியை வகுத்து ஸ்வரஸ்தானங்களை ஏற்படுத்தினார்கள். A பாகமாகிய பாதித்தந்தி போக பாக்கி பாதியின் $\frac{1}{4}$ பாகத்தை m என்றும் $\frac{1}{3}$ பாகத்தை P என்றும் குறிப்போம். அதின் முறையாவது:—

$\frac{3}{4}$, $\frac{2}{3}$ இந்த (fractions) பின்னங்களினுடைய கீழ் லக்கங்கள் (denominators) ஆன 4-க்கும் 3-க்கும் (least common multiple) கனிஷ்ட சாமானிய குணிஜம் 12. அந்தப் பனிரண்டை வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஸ்தாயியையும் 12 (intervals) இடைவெளிகளிருக்கும்படியாக வகுத்தார்கள். அதாவது:—




இந்த வரியின் A முதலாவது ஸ்தாயி. B இரண்டாவது ஸ்தாயி. ஒவ்வொரு ஸ்தாயியையும் 12 இடைவெளிகளிருக்கும்படி வகுத்தால் ஒவ்வொரு இடைவெளியிலும் ஒரு ஸ்வரம் தொனிக்கிறது. அந்த 12 ஸ்வரங்களையும் சேர்த்துக் கானம் செய்தால் ஸமஷ்டி நாதமானது காதுக்கு ரஞ்சகமாயிராது. ரஞ்சகமாயிருப்பதுதான் இராகம். (ராகம்) என்னும் சொல் ரஞ்ஜ் (Ranj)என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அந்த தாதுவுக்குச் சந்தோஷப்படுதல்

(to be pleased) எனப் பொருள். மேலும் எல்லா ஸ்வரங்களையும் சேர்த்துக் கானம் செய்தால் இராகங்களின் வேறுபாடுகள் ஏற்பட இடமிராது. ஆகவே சிற்சில ஸ்வரங்களைமட்டும் பொருக்கி எடுக்க வேண்டியதாயிற்று. அப்படி எடுப்பதில் 3 ஸ்வரங்கள் முன்னமே யே நிலைவரப்பட்டிருக்கின்றன. அவைகளாவன:—

(1) s= 1-வது ஸ்வரம். தந்தியை வகுக்காமல் இருந்தபடி யே மீட்டுவதினுல் முழுத்தந்தியிலும் வியாபத்தியாய் உண்டா கும் ஸ்வரம்.

(2) m=அழுத்தப்படும் $\frac{1}{4}$ பாகம் தந்திபோக பாக்கி $\frac{3}{4}$ தந் தியில் வியாபத்தியாய் உண்டாகும் ஸ்வரம்.

(3) p=அழுத்தப்படும் $\frac{1}{3}$ பாகம் தந்திபோக பாக்கி $\frac{2}{3}$ தந்தி யில் வியாபத்தியாய் உண்டாகும் ஸ்வரம்.

இந்த ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் 4 சுருதிகளடங்கிய ஸ்வரித மாகின்றது.

A | B

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

s m p s m p

1 $\frac{3}{4}$ $\frac{2}{3}$ $\frac{3}{4}$ $\frac{2}{3}$

ஸ்வரிதம் ஸ்வரிதம் ஸ்வரிதம் ஸ்வரிதம் ஸ்வரிதம் ஸ்வரிதம்

முந்திய வரியைப் பார்ப்பதினுல் $\frac{s}{1}$ முதலாவது இடைவெளியெ ன்றும், $\frac{m}{\frac{3}{4}}$ 6-வது இடைவெளியென்றும் $\frac{p}{\frac{2}{3}}$ 8-வது இடைவெ ளியென்றும் தெரியலாம். அவைகளின் தாரதம்மியம்=1, $\frac{3}{4}$, $\frac{2}{3}$ ஆகி ன்றது. இரண்டு ஸ்வரிதங்களுக்கிடையில் உதாத்தமும் ஒரு அனு தாத்தமும் அமையவேண்டியதென்பது விதி. s-க்கும் m-க்கும் மத்தியிலும், p-க்கும் மேல் s-க்கும் மத்தியிலும் ஒரு உதாத்தத் தையும் ஒரு அநுதாத்தத்தையும் அமைக்கவேண்டியது. அப்படி அமைப்பதில், சராசரி 12 இடைவெளிகளில் (intervals) காதுக்கு இனிமையும் பொருத்தமுமான நாதங்கள் ஸ்புரிக்கவில்லை. அந்த சராசரி (intervals) இடை வெளிகளின் நாதங்களைக் கைக்கொண்டு தான் மேற்றேசத்தாரில் ஒரு கொள்கையினர் Chromatic Scale என்று ஏற்படுத்தி ஸ்வரஸ்தானங்களை அமைத்திருக்கிறார்கள்

அந்த ஸ்வரங்களெல்லாம் சரியானவைகளில்லையாகையால் நம்முடைய முறைப்படி ஏற்பட்டிருக்கும் ஸ்வரங்களிலிருந்து வித்தியாசப்படுகின்றன. அவைகள் இனிமையாகவுமில்லை. ஆகவே S-க்கும் P-க்கும் இருக்கிற (proportion) தாரதம்மியத்தைக் கொண்டே மற்ற ஸ்வரஸ்தானங்களையும் நம் முன்னவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள்.

(1) S ஆனது ஷட்ஜம். அது 1.

(2) P ஆனது மற்ற ஸ்வரங்களைப் பிரஸ்தரிப்பதற்குக் காரணமாயிருப்பதால் (பாவ் விஸ்தாரே அதாவது விஸ்தரிப்பதற்குக் காரணம்). அதற்கு "பஞ்சமம்" என்று பெயர் கொடுத்தார்கள். அது $\frac{2}{3}$.

(3) பின்பு, S-க்கு P $\frac{2}{3}$ ஆகவிருக்கிறபடி, P-க்கு $\frac{2}{3}$ அதாவது $\frac{2}{3}\times\frac{2}{3}=\frac{4}{9}$ ஒரு ஸ்வரஸ்தானம். அது பாதித்தந்திக்குக் குறைவதால் அது இரண்டாவது ஸ்தாயியின் ஒரு ஸ்வரஸ்தானம். அதை இரட்டிக்க அதாவது $4/9\times2=8/9$ ஆயிற்று. அது இரண்டாவது ஸ்தாயியின் 4/9-க்குச் சமானமான முதலாவது ஸ்தாயியின் ஒரு ஸ்வரஸ்தானம். அது கர்ஜனையாகிய இயல்புள்ளதாகையால் உவமை பற்றி அதற்கு ரிஷபமென்று சங்கேதமாகப் பெயரிட்டார்கள். அதை இங்கு R என்று குறிப்பிடுவோம். அதற்கு 3 சுருதிகள் அமைந்தன. அது உதாத்தம்.

4. பின்பு R-க்கு 2/3 அதாவது $8/9\times2/3=16/27$ ஒரு ஸ்வரஸ்தானம். அந்த ஸ்வரத்தின் பரிமாணம் முதலிய இயல்புகள் புத்திக்கூர்மையால் நிர்ணயிக்கப்படவேண்டியதைக் கருதி அதற்கு (தீ: =புத்தி, தீவத= புத்தியோடு சேர்ந்த, தைவத=புத்தியோடு சேர்ந்தயத்தினத்தினால் ஆராயத்தகுந்த) தைவதமென்று பெயரிட்டார்கள். அதற்கு 3 சுருதிகள் அமைந்தன. அதுவும் உதாத்தம். அதை D என்று குறிப்பிடுவோம்.

5. பின்பு, D-க்கு 2/3 அதாவது $16/27\times2/3=32/81$ ஒரு ஸ்வரஸ்தானம். அது பாதித் தந்திக்குக் குறைவதால் இரண்டாவது ஸ்தாயியின் ஒரு ஸ்வரஸ்தானம். அதை இரட்டிக்க அதாவது $32/81\times2=64/81$ அது இரண்டாவது ஸ்தாயியின் 32/81-க்குச் சமானமான முதலாவது ஸ்தாயியின் ஒரு ஸ்வரஸ்தானம். அந்த

ஸ்வரம் ஆனந்தத்துக்கு உறுதியான இயல்பைக் கொடுப்பதால் (கா=பாட்டு, தாரயதி=தரிக்கிறது, உறுதியாயிருக்கச் செய்கிறது) "காந்தாரம்" என்று பெயரிட்டார்கள். அதற்கு 2 சுருதி. அது அனுதாத்தம். அதை G என்று குறிப்பிடுவோம்.

6. பின்பு G-க்கு 2/3 அதாவது 64/81×2/3=128/243 ஒரு ஸ்வரஸ்தானம். அந்த ஸ்வரம் மேல் ஷட்ஜத்துக்கு நெருங்கிக் கீழாக அமர்ந்திருப்பதால் (நிஷீத் கீழாக அமர்தல் to sit or settle down) அதற்கு நிஷாதமென்று பெயரிட்டார்கள். அதற்கும் 2 சுருதி. அது அநுதாத்தம். அதை M என்று குறிப்பிடுவோம் இவ்விதமாக பின்னத்தொகை (fractions)களின் வரிசைப்படி

(1) S ஷட்ஜம் 1 = சுருதி 4
(2) R ரிஷபம் 8/9= ,, 3
(3) G காந்தாரம் 64/81= ,, 2
(4) M மத்தியமம் 3/4= ,, 4
(5) P பஞ்சமம் 2/3= ,, 4
(6) D தைவதம் 16/27= ,, 3
(7) N நிஷாதம் 128/243=,, 2

இந்த 7 ஸ்வரங்களின் மொத்தத்தில் 22 சுருதிகளும் அடங்கிவிட்டபடியால் கானத்தில் (ஸப்த) ஏழு ஸ்வரங்களுக்குமேல் கிடையாது.

இந்த ஸ்வரஸ்தானங்களை நிர்ணயிக்கையில் மேற்கண்ட (fractions) பின்னத்தொகைகளில் சில (complex) தலை சுற்றுவனவாக இருக்கின்றனவென்று நினைத்து அவைகளுக்குப் பதிலாக எளிய பின்னத்தொகைகளைக் கற்பித்து முறையே $\frac{1}{1}$, $\frac{8}{9}$, $\frac{4}{5}$, $\frac{3}{4}$, $\frac{2}{3}$, $\frac{3}{5}$, $\frac{8}{15}$ என்று மேற்தேசத்தாரின் மற்றொரு கொள்கையினர் கைக்கொண்டிருக்கிறார்கள். இதினால் ஸ்வரங்களுக்குச் சுருதிபேதம் ஏற்பட்டு ஆதிஸ்வரமாகிய (fundamental note) ஷட்ஜத்துக்கும் அவைகளுக்கும் (proportion) தாரதம்மியம் வேறுபடுவதால் சரியான ஸ்வரங்கள் ஸ்புரிக்கவில்லை. அவைகளினலமைந்த ஹார்மோனியம் முதலியவைகளுடைய நாதங்கள் இனிமையாயில்லாதிருப்பதற்கு அதுதான் காரணம். ஆகவே Indian Scale, சராசரி Scale, (Western) Ordinary Scale என மூன்றுமுறைகள் சொல்லப்பட்டன.

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர்.

(இன்னும்வரும்)

# தென்னை, பனை மரத்து வண்டுகள்.

இரண்டுதினுசு வண்டுகள் தென்னமரங்களையும் மற்றப் *பனைவர்க்கங்களையும் பிடித்து அச் செடிகளுக்கு மிக நஷ்டத்தை உண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்று, தமிழில் "தென்னைவண்டு" என்றும், மலையாளத்தில் "சேர்ளு"என்றும் சொல்லப்படுகின்றது. அது தலையில் ஒரு கொம்பையுடைய கறுப்புவர்ணமுள்ள ஒருபெரிய வண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இவ்வண்டுகள் இளந் தென்னமரங்களைத் துளைத்து ஜாஸ்தி நாசமாக்குவதைப் போல் முற்றினமரங்களைக் கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிடும். அவைகளிலிருந்து புழுக்கள் வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரிதாகின்றன. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேற்சொன்ன வண்டுகளாக உருமாறுகின்றன.

வேறொருவித வண்டு தமிழில் "செவ்வண்டு" என்று சொல்லப்படும். இது முன்சொன்ன கறுப்புவண்டைவிடச் சிறிதானது. இதைஅதனுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் சாதாரணமாய்த் தென்னை வண்டாலாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த வடுப்பட்ட இடங்களில் முட்டைகள் வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சிமரத்தைத் துளைத்துச் செடிகளைக் கொன்றுவிடும்; இப்புழுக்கள் நார் இழைகளைக்கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டுவாரங்களில் உருமாறி வண்டுகளாகின்றன.

இவைகளின் கேடுதிகளை மாற்றக்கூடிய பிரயத்தினங்கள்:

1. தென்னைவண்டு, தான் ஜாஸ்தி கெடுதி செடிகளுக்குச் செய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்குக் காரணபூதமாயிருக்கிறது. இந்தத் தென்னை வண்டை அனேகஇடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப் போல் வெகு சுலபமாய் ஒரு வண்டு எடுக்கும் இருப்புமுள் ஊசிகொண்டு எடுத்து விடலாம்.

2. இவ்வண்டுகளை அப்புறப்படுத்திய பின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளைத் தாரினால்தடவி மண்கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் வடுக்களிலும் மேற்சொன்ன தாரைத் தடவ

* தென்னை, பனை, கமுகு, ஈச்சை முதலியன பனைவர்க்கத்தைச் சேர்ந்த மரங்களாகும்.

வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் சேவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளைவைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டை வைத்தபின் மரங்களைச் சுலபமாய்க் காப்பாற்ற இயலாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக் கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னைவண்டைத் துரத்திவிட ஏதுவுண்டு.

4. செவ்வண்டினால் பிடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டா. ஆகையால் அவைகளைத் தாமஸமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியையும் அழித்திடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாக மாறிப் புது மரங்களை நாசமாக்கும்.

5. ஒருதோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கிறியுடைத்துக்காயப்போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவே கூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னைவண்டு பல்கிப் பெருகும். தோட்டத்துக்குள் எந்த விதமான வஸ்துவும் அழுகிக் குவிய இடங்கொடுக்கக் கூடாது.

6. சில இடங்களில் தென்னமரத்துச் செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக் கெடுக்கிறதென்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகையால் மேல்தரையிலிருந்து சிலஅடிகளுக்குமேல்மரத்தைத் துளைப்பது வழக்கமாயிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேற்சொன்னபிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிகநஷ்டத்தை யுண்டுபண்ண ஏதுவாகும். ஆகையால் அப்படிச் செய்யவே கூடாது.

மேற்சொன்ன இரண்டுவண்டுகளின்நாசமும் ஒன்றையொன்று பொருத்ததாயிருக்கிறது: தென்னைவண்டு, நன்றாயிருக்கும் உச்சிமரங்களில் துளைகளையுண்டாக்கிச் செவ்வண்டு அதில்வந்துசேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் செத்துப்போன மரங்கள் தென்னைவண்டுகள் பல்கிப்பெருக நல்ல வாசஸ்தானமாகிறது. ஆகையால் மேற்சொன்னபடி முன்ஜாக்கிரதையோடு கவனம்செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடித்த தென்னந்தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நாசமாவதைத் தடுக்கமுடியாது.

ஸி. ஏ. பார்பர்,
சர்க்கார் ஸ்தாவர சாஸ்திரி.

## சமாசாரம்.

---

மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள பிரஹ்மஞாந கிளைச்சங்கங்களின் மஹாசபை:—சென்ற ஜூலை 22, 23-ம் தேதிகளில்இராமநாதபுரத்தில் சங்கரவிலாஸம் என்ற முகவை ஊரணிக்கு அடுத்த பங்களாவில் கூடியது. சபையைச்சேர்ந்த மெம்பர்கள் 20 பெயர்கள் கூடினார்கள். சபையைச் சேராதவர்கள் 100 பெயர்களுக்குமேல் இரண்டு தினமும் வந்திருந்தார்கள். பிரஹ்ம ஸ்ரீ ப. நாராயண அய்யர் அவர்கள் அக்கிராசநம் வகித்தார்கள். இராமநாதபுரம் ராஜா மகா-ா-ா-ஸ்ரீ ராஜ ராஜேசுவர ஸேதுபதி அவர்களும், ஸப்டிவிஷன் ஜமீந்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்கம் ஸ்தாபகரும் அக்கிராஸநாதிபதியுமான மகா-ா-ா-ஸ்ரீ பாண்டித்துரைசாமித்தேவரவர்களும் வித்துவான் மகா-ா-ாஸ்ரீராகவய்யங்காரவர்களும் வந்திருந்தார்கள். எல்லாரும் ஷை சபையை ஆதரித்தார்கள். அடியிற்கண்டபடி உபந்நியாஸங்கள் நடந்தன. இராமநாதபுரம் கிளைச்சபையாரும், முக்கியமாய் அதன் காரியதரிசியான மகா-ா-ாஸ்ரீ காளஹஸ்தி அய்யரவர்களும்விருந்தோம்பல் என்ற தர்மத்தை நன்றாய் நடத்தினார்கள். எல்லாம் சுபகரமாக நடந்தது. முதல்நாள் நடந்த உபந்நியாசங்களின் விவரம்:- முதன்மையில் சிறுவர்கள் மூவர் தேவார ஸ்தோத்திரம் பாடினார்கள். இராமநாதபுரம் ராஜவம்சத்தைச் சேர்ந்த மகா-ா-ா-ஸ்ரீ வேலுசாமித்தேவரவர்கள்,சபையாரின் நல்வரவைப் பற்றி அழகாய் உபசரணை செய்தார்கள். பிரஹ்மஞாநம்என்பதைப்பற்றியும், நம் தேசத்திற்கு பிரஹ்மஞாந சபையினாலுண்டான பிரயோஜநத்தைப் பற்றியும், விஸ்தாரமாய் அக்கிராஸநாதிபதி உபந்நியாஸம்செய்தார்கள். பெரியகுளம் மகா-ா-ா-ஸ்ரீ சுந்தராராஜ அய்யரவர்கள் பிரஹ்மஞாந சபையைப் பற்றி உபந்நியாஸம் செய்ததில், நம்மவர்கள்ஊக்கமும் விடாமுயற்சியும் கைப் பற்றி நடக்கவேண்டியதென்று வற்புறுத்தி உரைத்தார்கள். இராமநாதபுரம் பண்டிட் எம். ராகவ அய்யங்காரவர்கள் ஸ்ரீ சடகோபஆழ்வாரைப் பற்றி வெகு ஆராய்ச்சியுடனே விஸ்தாரமாய் உபந்நியாஸம் செய்தார்கள். ஸ்ரீமாந். பாண்டித்துரைசாமித் தேவரவர்கள் "சைவ சமயத்தின் உயர்வைப்"பற்றி உபந்நியாஸம் செய்ததில் எல்லாச் சமயங்களும் சைவஸித்தாந்தத்தில் அடங்கும் என்றும், அதன் உபதேசங்களும் அநுஷ்டாநங்களும் ஸோபாநக்கிரமமாக (ஏணியின் முறையாக) அறிவின்மிக்கார் முதற்கொண்டு அறிவில் ஏழைகள் ஈறாக யாவருக்கும் பிரயோஜநமாகும்படியாக பல துறைகளாக நடைபெறுகின்றனவென்றும் விஸ்தாரமாய்ச் சொன்னார்கள். மகா-ா-ா-ஸ்ரீ A. ரங்கசாமி அய்யரவர்கள் பிரஹ்மஞாந சபையால் நம்தேசத்திற்கு உண்டாயிருக்கும் இலாபத்தைப்பற்றியும் இனி உண்டாகக்கூடும் இலாபத்தைப்பற்றியும் உபந்நியஸித்தார்கள்.

எனங்குடி ஸ்ரீமாந் இராமச்சந்திர நாயக்கர் அவர்கள் மந்திரோச்சாரணம் சரியாய்ப் பயன்படும் முறையைப்பற்றி விஸ்தாரமாய் உபந்நியஸித்தார்கள். அன்றிரவு ஸ்தூலசூக்ஷ்ம சரீரங்களைப்பற்றியும் கிரகங்களின் கதியைப்பற்றியும், சூரிய மண்டலத்தைப்பற்றியும் நிழல்படங்கள் மூலியமாய் மதுரை, ப. நாராயண அய்யரவர்களும், கும்பகோணம் டாக்டர் ஆர். ஸி. கிருஷ்ணசாமி அய்யரவர்களும் உபந்நியாசம் செய்தார்கள்.

இரண்டாம் நாள் நடந்த உபந்நியாசங்களின் கிரமம்:—

சன்மார்க்கத்தைப்பற்றி ப. நாராயண அய்யரவர்கள்செய்த உபந்நியாஸத்தில், வேதாந்தம், சைவசித்தாந்தங்களின் ஒற்றுமைகளைப்பற்றி தானுன வேதாந்தம் தானேன்னும் ஸித்தாந்தம் என்ற திருமூலரின் வாக்கியத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு விஸ்தாரமாக உபந்நியாஸம் செய்தார்கள் டாக்டர் ஆர். ஸி கிருஷ்ணசாமி அய்யரவர்கள் மனுஷ்ய சரீரத்தின் உற்பத்தியின் அர்ப்புதத்தைப்பற்றித் தெளிவாய் யாருக்கும்புலப்படும்படியாய் உபந்நியஸித்தார்கள். பெரியகுளம் சுந்தரராஜ அய்யரவர்கள் புனர்ஜந்மத்தைப் பற்றி, விரிவானஉபந்நியாஸம் செய்தார்கள். இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் பண்டிட், ஆர். இராகவய்யங்கார் அவர்கள் புருஷப்பிரயத்தனமும் ஈசுவராநுக்கிரஹமும் என்பதைப்பற்றித் திருவாய் மொழிமுதலான கிரந்தங்களினின்று பலபாசுரங்களை மேற்கோளாகக்காட்டி உபந்நியாஸம் செய்தார்கள். ஸமாப்தியாக அக்கிராஸநாதிபதி செய்த உபந்நியாஸத்தில் தபஸ், ஸ்வாத்தியாயம், பிரவசநம், ஈசுவரப் பிரணிதாநம் என்று 4 விதமாக ஒவ்வொரு அறிவுள்ளவன் வாழ் நாள் நடைபெறவேண்டிய உத்தரவாதத்தைப்பற்றி வற்புறுத்திச்சொன்னார்கள். எல்லா உபந்நியாஸங்களும் தமிழ்ப் பாஷையிலேயே நடைபெற்றன.

அடுத்த சபையானது அக்டோபர் அல்லது நவம்பர்மீ'த்தில் பரம்பக்குடியில் நடத்தப்பெறும்.

---

திருவண்ணாமலையில் பிரஹ்மஞாநக் கிளைச்சபைகளின் கூட்டம்:— சென்றஜூலைமீ 22, 23ம் தேதிகளில் கூடலூர் ஜில்லாவிலுள்ள பிரஹ்மஞாநக் கிளைச்சபைகளின் கூட்டம் ஸ்ரீமாந். Brooks என்பார் அக்கிராஸநத்தின் கீழ் நடைபெற்றது.

பத்திராதிபர்.

---

யாழ்ப்பாணம் ஸ்ரீமாந். இராமநாதன் அவர்கள் ஆத்மாவை அறியும் பழக்கமுறையைப்பற்றியும் அதின் பயிற்சியைப்பற்றியும் இந்தியா தேசத்திலும் மேல்நாட்டிலும் நடைபெறும் அநுஷ்டான முறைகளைப்பற்றியும், விரிவான ஒரு உபந்யாஸம் மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில் சென்றமீ 28உ வெள்ளிக்கிழமை சாயங்காலம் ஒன்றரைமணிகாலம் ஆங்கிலத்தில் செய்தார்கள். உபந்யாஸத்தின் சில முக்கிய அம்சங்கள் இதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

விவிலிய நூலில் முக்கியமாகப் புதிய ஏற்பாட்டினின்று அநேக ஞான விஷயங்களை, நம் தேசத்தில் அநுஷ்டிக்கப்படுகிற கோட்பாடுகளுக்கு ஒற்றுமையுள்ளனவாக எடுத்துக்காட்டினார். பாரநந்தா என்ற பெயரை வகித்துக்கொண்டு St. Mathew's, St. John's என்ற இயேசு கிறீஸ்து நாதரின் திவ்வியசரித்திரங்களுக்கு உயர்ந்த பாஷ்யம் செய்தவர் இவரே. அவர் உபந்யஸித்த விஷயங்கள் முக்கியமாய் அப்புத்தகங்களினின்றே எடுத்து வியவஹரிக்கப்பட்டன. ஈசுவரன் அறிவுமயன். அன்பே அவரது ஸ்வரூபம் என்பதைத் தெளிவாய் விளக்கினார். "Christ" என்றால் 'ஆத்மா' என்பது பொருள். "Christ" என்னும் தத்துவம் பெறுதல் என்றால் ஆத்மாவின் மலர்ச்சியாம், மெய்யுணர்வு பெறுதலாம். கிறீஸ்து ஈசுவரனின் ஒரே புத்திரன் என்று சொல்லுதல் பிழையாம். அவ்விதம் மெய்யுணர்வு பெற்றவர்கள் பலராம். "Resurrection" என்ற மொழியை மேல்நாட்டார் விபரீத அர்த்தம் பண்ணுகின்றார்கள். அது நம் தேசத்தில் ஞானம் பெற்று துவிஜனாதல் என்பதேயாம். ஆத்மப்பயிற்சி முறை இதுவாம். யாவருக்கும், சுயநலம் பாராட்டியே கர்மம் செய்வது, இயல்பாம். அதைச் சிறுகச் சிறுக மாற்றி உற்றார், ஊரார் முதலிய அயலாரிடம் அன்புவைத்து அவர்கட்கும் உபயோகமாகக் கர்மம் செய்தல் இரண்டாம் படியாம். பின்னர் ஸர்வ பூதங்களிடமும் ஜீவகாருண்ணியம் பாராட்டி, இவ்வன்பையே அகண்டாகார விர்த்தியாக அமையும்படி செய்தல், இதுவே மூன்றும் படியாம். இதுவே பேரன்பாகும்.

மதுரை ஸ்ரீ மீநாக்ஷி வித்தியாசாலையின் 6-வது வருஷத்திய விசேஷ உத்ஸவம் சென்ற மீ 29உ ஸ்ரீமாந். இராமநாதன் அவர்களது அக்கிராஸநத்தின் கீழ் நடைபெற்றது. அவருடைய பத்நியார் (ஒரு ஆங்கில ஸ்திரீ) குழந்தைகளுக்குப் பரிசுகளை விநியோகித்தனர். ஸ்ரீமாந். இராமநாதன் என்பார் பெண்கல்வியின் அவசியத்தைப்பற்றியும், நம் தேசத்திற்கு அது இன்றியமையாத ஸாதநம் என்றும், கீழ்த்தரமான

படிப்போடுமட்டும் நிறுத்தல் அவ்வளவு பயனில்லை என்றும் உயர்தரப்படிப்பைக் கற்பிக்கும் கலாசாலைகளைப் பல இடங்களில் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அப்போதுதான் மாது சிரோமணிகள் ஏற்படுவார்களென்றும், ஒரு இரதம் நேர்மையாகப் போகவேண்டுமென்றால் அதிற் பூட்டிய இரண்டு குதிரைகளும் ஒரே தன்மையனவாக இருக்கவேண்டுவது போலவும், ஒரு விஷயத்தைப் பார்க்கவேண்டுமானால் கண்களிரண்டும் நோக்கவேண்டுவது போலவும், ஒரு குடும்பம் அல்லது ஒரு தேசம் நடைபெற வேண்டுமானால் ஒரு பகுதியரான ஆண்பாலர் மாத்திரம் கல்விப்பயிற்சி பெறுதலும் மற்றப்பகுதியரான பெண்பாலர் அப்பயிற்சி பெறாதலும், வண்டி குடம் கவிழ்தல்போல குடும்பமும் தேசமும் கவிழ்ந்து சீர்கேட்டை அடையுமென்றும் விஸ்தாரமாக உபந்நியாஸம் செய்தார்கள். ஷெயார் யாழ்ப்பாணத்தில் 200 பெண்கள் பள்ளிக்கூடத்திலேயேதங்கி வசித்துக் கல்வியைக் கசடறக் கற்கும்பொருட்டு ஏராளமான திரவியம் செலவழித்து, சாஸ்திரமுறைப்படி ஒரு அரிய கல்லூரி ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு ஏற்ற கட்டிடம் நடைபெற்றுக்கொண்டுவருகிறது. ஆறுமாதத்திற்குள் கல்விகற்பித்தல் அதில் ஆரம்பிக்கப்படும் என்று அவர்கள் சொன்னார்கள். ஸ்ரீ மீனாக்ஷிவித்தியாசாலை என்ற பெண்பாடசாலை மதுரை பிரஹ்மணார சபையாரால் 6 வருஷத்திற்கு முந்தி ஏற்படுத்தப்பெற்றது. விசாலமான இடத்தில் அழகான கட்டிடத்தில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இதில் இப்போது 265 குழந்தைகள் படிக்கின்றார்கள். நீதிநூல்கள், ஸநாதநதர்ம சமயமுறையின் நூல்களும், சங்கீதமும், சித்திரமெழுதலும், குடும்பத்திற்கு வேண்டிய கணக்கு வாய்ப்பாடுகளும் பின்னும் சில உபயோகமானவையும் கற்பிக்கப்படுகின்றன. ஏழு வகுப்புகள் 10 உபாத்தியாயரால் நடத்தப்பெறுகின்றன. நால்வர் ஸ்திரீகள். 6 பெயர்கள் ஆண்பாலர்கள். வருவாய்:-குழந்தைகளின்பள்ளிக்கூடச்சம்பளம் ரூ 228-0-0. சர்க்கார் உதவி மிகவும் சொற்பம் ரூ 533-0-0. தர்மசிந்தனை யுள்ளவர்களால் நன்கொடை ரூ 2,400. மனையிடமும் கட்டிடமும் சேர்ந்து இப்போதிய விலைக்கு ரூ 20,000 பெறும். பிரகிருதஸ்திதியில் இருக்கும் கட்டிடம்போதாமையால் நாலு வகுப்புகள் நடத்துவதற்காகக் கூரைக்கட்டிடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. வருஷத்திற்கு ரூ 1, 00 வரை செலவாகின்றது. வரும்படி கொடுக்கக்கூடிய மூலதநம் இல்லை. மதுரைப்பட்டணத்தில் 1,20,000 ஜநங்களுக்கு மேலிருக்கின்றார்கள். பெரும்பான்மையார் ஹிந்துக்கள். இப்பள்ளிக்கூடம்போல 10 பள்ளிக்கூடங்கள் இந்நகருக்கு வேண்டுவன. அறிவுள்ள செல்வமுடையார் தங்கள் செல்வத்தை இத்துறைகளில் செலவழித்து வந்தால் அவ்விதம் ஏற்படும். அவைகளால் தேசம் நலம் பெறும்.

---

# பூர்ணசந்திரோதய விளம்பரம்

---

## சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ இரண்டுதான்.
தனிப்பிரதி விலை அணா 4.

## விளம்பர விகிதம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் | 1 | மாசம் | 4—0—0 | அரைபக்கம் | 1 | மாசம் | 2—8—0 |
| ,, | 3 | ,, | 10—0—0 | ,, | 3 | ,, | 7—0—0 |
| ,, | 6 | ,, | 20—0—0 | ,, | 6 | ,, | 12—0—0 |
| ,, | 1 | வரு | 36—0—0 | ,, | 1 | வரு | 18—0—0 |

ப. நாராயண அய்யர்,
பத்திராதிபரும் மானேஜரும்.

## புஸ்தகப், துண்டு பத்திரிகைகள் விளம்பரம்.

---

| | |
|---|---|
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமததூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| அவதாரங்களின் உண்மை | 0-8-0 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| அன்பு, அதன் உண்மை | 0-0-6 |
| சுகிர்தம்பயக்கும் வாழ்நாள்முறை | 0-0-3 |
| மடங்கள், மடாதிபதிகள் | 0-1-0 |
| நவராத்திரி அல்லது மஹிஷாஸுரமர்தநம் | 0-0-3 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்திய புத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |
| ௸ யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| ௸ ஆங்கிலத்தில் | 0-0-3 |
| நாமிருக்கும் வீடு | 0-0-6 |
| அஷ்டமிபிரதக்ஷிணம் | 0-0-1 |
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறை நூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 20 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,
பிரெஸிடெண்டு பிரஹ்மஞாந சபை, மதுரை.

160

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

| | | |
|---|---|---|
| திருப்தியில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பர காட்லாக் இனாமாக அனுப்பப்படும் |

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருக்கும், சம்மதமில்லாததைத்திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 முழம் 1க்கு ரூபா | 0 | 14 | 0 | | 9 முழம் 1க்கு ரூபா | 2 | 0 | 0 |
| 6 ஷை | 1 | 4 | 0 | | 10 ஷை | 2 | 8 | 0 |
| 7 ஷை | 1 | 8 | 0 | | 12 ஷை | 3 | 8 | 0 |
| 8 ஷை | 1 | 12 | 0 | | 15 ஷை | 4 | 8 | 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6முழம் நீளம் 3 முழ அகலம். செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உறப்படி 1-க்கு ரூபா 5—0—0. தபால்செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்.

விலாசம்: மானேஜர்,

# பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, Benares City